**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026−ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.112/2023**

(TNTM03000261/2023)

லட்சுமண காந்தன் (எ) சோமசுந்திரம் ... வாதி

... எதிர் ...

பிச்சை ... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 13.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வெங்கடேசன்,B.Com.,LL.M., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மனோகரன்,M.B.A., LL.B., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா 1வது அயிட்ட சொத்து வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்யவேண்டியும், வாதி 1வது அயிட்ட சொத்தை அனுபவம் செய்வதை பிரதிவாதியோ அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகையை செலுத்தக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:−**

வழக்கு சொத்துக்கள் நடப்பா என்கிற சின்னக்குழந்தை பிள்ளை என்பவருக்கு சொந்தமானது ஆகும். அவர் வாதியின் சிறிய தாத்தா ஆவார். வாதியின் தாயாரின் சித்தப்பா ஆவார். அவர் வாதியை 14 வயது இளவராக குறிப்பிட்டு வாதியின் தகப்பனார் ஆறுமுகத்தை பாதுகாவலராக குறிப்பிட்டு கடந்த 12.10.1994ம் தேதி வழக்கு சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதிவைத்தார். வழக்கு சொத்துக்களுக்கான பட்டா நடப்பா (எ) சின்னகுழந்தை பிள்ளை பெயரில் உள்ளது. அசல் உயில் ஆவணம் இவ்வழக்குரையுடன் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மேற்படி நடப்பா (எ) சின்னகுழந்தை கடந்த 14.02.2002ல் இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு உயில் அடிப்படையில் வாதி வழக்கு சொத்துக்களின் உரிமையாளர் ஆவார். 1வது அயிட்ட சொத்தை தவிர மற்ற சொத்துக்களுக்கு வாதி பெயரில் பட்டா எண்.3377 ஏற்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் உரிமை ஏதும் இல்லை. பிரதிவாதி வழக்கு சொத்துக்களின் அனுபவத்திலும் இல்லை. செட்டில்மெண்ட் ஆவணம் தனது தாயார் தனக்கு எழுதிவைத்ததாகவும், 1வது அயிட்ட சொத்து தனக்கு உரிமை என்று பிரதிவாதி கூறி வருகிறார். எனவே வாதி பிரதிவாதிக்கு கடந்த 18.04.2023 தேதி வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார். அந்த அறிவிப்பு மூலம் 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதி உரிமை கோரக்கூடாது என்று விவரம் கூறி அனுப்பப்பட்டது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு பிரதிவாதி தரப்பில் 15.05.2023ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த பதில் அறிவிப்பில் சின்னகுழந்தை பிள்ளை தனது தாயார் சீதா அம்மாளுக்கு 14.12.2002ல் உயில் எழுதிவைத்ததாகவும், அதன் அடிப்படையில், அவர் பிரதிவாதிக்கு 04.05.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தாவா 1வது அயிட்ட சொத்தையும், பிற சொத்துக்களையும் எழுதிவைத்ததாக கூறியுள்ளார். அது உண்மையல்ல. 12.10.1994 தேதியிட்ட உயில் எழுதிவைத்த பிறகு மேற்படி சின்னகுழந்தை 14.12.2002ல் எவ்வாறு மீண்டும் உயில் எழுதிவைக்க முடியும். பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் உண்மையல்ல. பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள உயில் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தை வாதி மறுக்கிறார். வாதியின் சொத்தை அபகரிக்கவேண்டி அந்த உயில் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று வாதி சந்தேகப்படுகிறார். பிரதிவாதியின் தீய எண்ணத்தை அது காட்டுகிறது. பிரதிவாதி தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டும் பிரச்சனை செய்கிறார். தாவா 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் குறித்து பிரச்சனை எழுப்பவில்லை. 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களுக்கு வாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. 04.05.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் வாதி தரப்பினர் இல்லை. எனவே அந்த ஆவணத்தை வாதி ரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை. எனவே 1வது அயிட்ட சொத்தை பொருத்த மட்டும் விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளார்.

2. **<u>பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**:–

வாதியின் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்கானது சட்டப்படியும் நியாயப்படியும் செல்லதக்கதல்ல. இப்பிரதிவாதி தரப்பில் தாமாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர்த்து ஏனைய சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி தாவா பாரா 1ல் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். அதில் கண்டுள்ளது போல் வாதி பெயருக்கு அவரது தாயார் எழுதிக்கொடுத்தாக கூறப்படும் உயில் சாசன பத்திரம் பற்றி இப்பிரதிவாதிக்கு ஏதும் தெரியாது. மேற்படி உயில் சாசன

பத்திரம் உண்மை தன்மையை வாதியே சட்டப்படி நிரூபிக்க கடமை பட்டவர் ஆவார். மேற்படி தாவா பாரா 2ல் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். வாதி தாவாவில் கண்ட நடப்பா (எ) சின்னகுழந்தை என்பவர் இறந்தார் என்பது மட்டும் வாஸ்தவம் அதனை தவிர்த்து மற்ற சங்கதிகளை இப்பிரதிவாதியானவர் முற்றிலுமாக மறுக்கின்றார். அவைகளை வாதியே சட்டப்படி நிரூபிக்க கடமை பட்டவர் ஆவார்.

3. மேற்படி தாவா பாரா 3ல் கண்ட சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். அதில் கண்டுள்ளது போல் வாதி பிரதிவாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பினை அனுப்பி இருந்தார். மேற்படி சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிரதிவாதியானவர் உண்மைகளை விளக்கி தெளிவான பதில் சட்ட அறிவிப்பினை வாதி வழக்கறிஞருக்கு அனுப்பி இருந்தார். மேற்படி தாவா பாரா 4ல் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். அதில் கண்டுள்ளது போல் தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து பரிகாரம் கோர வாதிக்கு எந்த விதமான முகாந்திரமும் இல்லை என்பதை இப்பிரதிவாதியானவர் இந்த பதிலுரையின் மூலம் தெரிவித்துக்கொள்கின்றார். மேற்படி தாவா பாரா 6ல் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். வாதியின் தாயார் சீதா என்பவர் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து வாதிக்கு நன்கு தெரியும், அதனை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா ஆனது சட்டப்படி செல்லதக்கதல்ல. மேற்படி தாவா பாரா 7ல் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதிகள் ஆகும். மேற்படி தாவா 1வது அயிட்ட சொத்தினை குறித்து பரிகாரம் கேட்க வாதியானவர் தகுதியற்ற நபர் ஆவார். தாவா பாரா 8ல் கண்டுள்ள வியாஜ்ஜியமூலம் மிகவும் தவறானவை அவை வாதியால் ஜோடிக்கப்பட்டவை. தாவா பாரா 9ல் கண்டுள்ள சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு மாறான சங்கதி ஆகும் வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணங்கள் சரியல்ல.

4. வாதியானவர் இப்பிரதிவாதியின் சித்தி மற்றும் சித்தப்பா மகன் ஆவார். மேலும் ஆதியில் தாவாவில் கண்ட சொத்துக்களும் இன்னும் பிற சொத்துக்களும் நடப்பா (எ) சின்னகுழந்தை என்பவருக்கு பாத்தியபட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி சின்ன குழந்தை என்பவர் பெயரில் உள்ள பட்டா எண்.339 தாக்கல் செய்யப்படுகிறது. அதன் பின்னர் 19.09.1988ல் வாதியின் தாயர் வேதவள்ளி மற்றும் இப்பிரதிவாதியின் தாயார் ஆன சீத்தா என்பவருக்குள் குடும்ப பாகப்பிரிவினை பத்திரம் எழுதியுள்ளார்கள். அதன்படி வாதியின் தாயார் ஆன சீத்தா அம்மாள் என்பவருக்கு 'அ' ஷெட்யூல் சொத்தானது ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேற்படி பாகப்பிரிவினை பத்திரப்படி வேதவல்லி மற்றும் சீத்தா ஆகியோர்கள் மேற்படி சொத்தினை கைப்பற்றி அனுபவித்து வந்துள்ளார்கள். மேற்படி சங்கதிகளை மறைத்து இந்த தாவாவினை இப்பிரதிவாதி மீது

தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாதியின் கூற்றுப்படி பார்க்கும்போது வாதியானவர் தூய்மையான கையோடு நீதிமன்றத்தை நாடவில்லை என்பது தெரிய வருகின்றது.

5. வாதியானவர் மேலும் வாதியின் தாயாருக்கு சிறிய தகப்பனார் ஆன காலம்சென்ற குள்ளுபிள்ளை அவர்களின் குமாரர் திரு.சின்னகுழந்தை பிள்ளை என்பவர் வாதியின் தாயார் ஆன சீத்தா பெயருக்கு 16.11.2002ல் ஒரு உயில் சாசன பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி சின்ன குழந்தைபிள்ளை என்பவர் 14.12.2002ல் இறந்துவிட்டார். மேற்படி நடப்பா (எ) சின்னகுழந்தை என்பவரின் இறப்பு சான்று தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி சின்னகுழந்தை பிள்ளை என்பவர் இறந்த பின்னர் மேற்படி உயிலில் கண்ட சொத்தினை பிரதிவாதியின் தாயார் ஆன சீத்தா அம்மாள் என்பவர் கைப்பற்றி யாருடைய தூண்டுதலே வற்புறுத்தலோ இன்றி அனுபவித்து வந்துள்ளார். மேற்படி சங்கதிகள் வாதிக்கு முழுவதும் தெரியும் அவைகளை மறைத்து மேற்படி தாவாவினை இப்பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். மேற்படி பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் என்பவருக்கு பிரதிவாதி மட்டுமே ஆண் வாரிசு ஆவார். எனவே பிரதிவாதியின் தாயார் தன் மகனுக்கு ஒரு சொத்து சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முழு மனதுடன் யாருடைய தூண்டுதலோ வற்புறுத்தலோ இன்றி நல்ல திடக்காத்திரத்துடன் ஒரு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவண எண்.4237/2012 என்று தன் மகன் (பிரதிவாதி)க்கு எழுதி கொடுத்துள்ளார். அந்த நாள் முதல் பிரதிவாதியானவர் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்து விபரத்தில் கண்ட சொத்தினை கைப்பற்றி ஆண்டு அனுபவித்து வருகின்றார். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வருவாய் துறையினர் பிரதிவாதி பெயருக்கு பட்டா எண்.3710 அளித்துள்ளார்கள்.

6 பிரதிவாதியானவர் மேற்படி தாவாவில் கண்ட 1வது அயிட்ட சொத்தினையும் 14.08.2013 அன்று கோவிந்தராஜ் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் போட்டுள்ளார். மேலும் 07.10.2013 அன்று அப்பாசாமி என்பவருக்கு மேற்படி சொத்தினை விற்கவும் உடன்படிக்கை மற்றும் 29.11.2013ல் தருமன் வகையறாவிடம் அடமானம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அதன்படி இப்பிரதிவாதியானவர் அவரது தாயார் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் படி சொத்தினை கைப்பற்றி அனுபவித்து வந்துள்ளார் என்பது நன்கு தெரிய வருகின்றது. மேற்படி ஆவணங்கள் மூலம் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் ஷரத்து படி சட்டப்படி நடைமுறைக்கு வந்துள்ளது உண்மை என்பது தெரியவருகின்றது. வாதியானவர் உடல் பருமன் மிக்கவர் ஆவார். மேலும் அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகின்றார். பணிக்காரணமாக அவர் அடிக்கடி வெளியூர் செல்வதை வாடிக்கையாக வைத்து இருந்தார். அவரின் தொழில் மற்றும் உடல் பருமனை காரணம் கண்டு அதனை சாதகமாக பயன்படுத்தி கடந்த சில மாதத்திற்கு முன்பு வாதியானவர் இப்பிரதிவாதியின் சொத்தினை அயிட்டம் 1ல் கண்ட சொத்தினை அபகரிக்கும்

செயலில் ஈடுபட்டுள்ளார். அதனை இப்பிரதிவாதியானவர் கேட்டதால் அவர் மீது வீண் விரோதம் கொண்டு இந்த தாவாவினை இப்பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

7. வாதியானவர் மேற்படி அயிட்டம் 1ல் கண்ட சொத்திற்க எந்த விதமான ஆவணமும் இன்றி மேற்படி தாவாவினை தாக்கல் செய்துள்ளார். இந்த ஒரு காரணத்திற்காகவே மேற்படி தாவா தள்ளுபடி செய்யபட வேண்டிய ஒன்றாகும் இப்பிரதிவாதியானவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் படி பிரதிவாதியானவர் தாவா அயிட்டம் 1ல் கண்ட சொத்து பாத்தியம் என்று நன்கு தெரியவருகிறது. அதனை மறைத்து வாதி தாக்கல் செய்துள்ள இந்த தாவா சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல. தாவாவில் சொல்லியுள்ள வியாஜ்ஜியமூலம் சரியல்ல. தாவாவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணங்கள் சரியல்ல. தாவாவில் வாதியால் கோரிய பரிகாரங்கள் ஏற்க்கக்கூடியதல்ல. மேற்படி பிரதிவாதியின் கூற்று படி பாக்க்கும்போது வாதி தாக்கல் செய்துள்ள தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்தினை வாதி எந்த சமயத்திலும் அனுபவித்தது இல்லை என்பது புலனாகிறது. மேற்படி வாதியானவர் தூய்மையான சுத்த கையோடு நீதிமன்றத்தை நாடவில்லை என்பதை நன்கு தெரிய வருகிறது. இப்பிரதிவாதியின் வளர்ச்சி மீது பொறாமை கொண்டு வாதியால் மேற்படி வழக்கு மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவா காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கவனக்குறைவால் இப்பிரதிவாதி இவ்வழக்கில் சொல்லபட வேண்டிய சங்கதிகளை ஏதேனும் விடுப்பட்டு இருந்தாலும், அல்லது இவ்வழக்கு சங்கதிகள் குறித்து ஏதேனும் புதிய தகவல்கள் கிடைத்தாலோ தேவைப்பட்டால் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்து தனது உரிமையினை நிலை நாட்ட இப்பிரதிவாதியானவர் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய மாண்பமை கோர்ட்டார் அவர்களை கேட்டுக்கொள்கிறார். மேலும் இப்பிரதிவாதியை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் மேற்படி வழக்கினை இப்பிரதிவாதி மீது வாதி தாக்கல் செய்துள்ளார். மேலும் இப்பிரதிவாதியின் மீது பொய்யான தாவா தாக்கல் செய்துள்ள வாதியானவர், இப்பிரதிவாதிக்கு சி.பி.சி. பிரிவு 35(எ) படி நிறையீட்டு தொகை ரூ.10,000/—ம் செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். எனவே இப்பிரதிவாதி மீது சட்டத்திற்கு புறம்பாக பொய்யான சங்கதிகளை கூறி வாதியானவர் தாக்கல் செய்துள்ள வாதியின் தாவாவினை இப்பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

8. <u>வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்</u>:—

வழக்கு சொத்துக்கள் எனது தாயாரின் சித்தப்பாவான நடப்பா (எ) சின்னகுழந்தைக்கு உரிமையானது ஆகும். அவர் எனது பெயருக்கு 12.10.1994 தேதியில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதிவைத்தார். அந்த உயில் ஆவணம்

வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் சின்னகுழந்தை பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு 1வது அயிட்ட சொத்தில் மட்டும் பிரச்சனை இருப்பதால், 1வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டும் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் நடப்பா (எ) சின்னகுழந்தை பிரதிவாதியின் தாயார் சீதா அம்மாளுக்கு 16.11.2002ல் ஒரு உயில் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றும், 14.12.2002ல் சின்னகுழந்தை இறந்த பிறகு சீதா அம்மாளுக்கு சொத்து பாத்தியப்பட்டது. அவர் அனுபவித்து வந்து தனது மகனான பிரதிவாதிக்கு 04.05.2012ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்ததாகவும், அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு உரிமையாகி பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று விவரம் கூறப்பட்டுள்ளது.

9. தாவா 1வது அயிட்டமான சர்வே எண்.283/4 சின்னகுழந்தை பெயரில் பட்டா வா.சா.ஆ.1 உள்ளது. அவர் வாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உயில் ஆவணம் வா.சா.ஆ.2 அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 1வது அயிட்ட சொத்தாக சர்வே எண்.283/4குறிப்பிடப்பட்டுள்ளது. சின்னகுழந்தை இறந்ததற்கான இறப்பு சான்று வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர் இறந்தபிறகு உயில் ஆவணத்தின் அடிப்படையில், வழக்கு சொத்துக்கள் வாதிக்கு உரிமையாகிவிட்டது. பிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதி தனக்கு உரிமை இருப்பதாக பிரச்சனை செய்த பிறகு வாதி வழக்கறிஞர் மூலம் 18.04.2023ல் அறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி தரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் பிரதிவாதியின் தாயாருக்கு 14.12.2002 தேதியில் உயில் ஆவணம் எழுதிவைத்துவிட்டு அவர் காலமான பிறகு சொத்து பிரதிவாதியின் தாயாருக்கு கிடைக்கபெற்று அவர் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்ததாக குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதி எதிர்வழக்குரையில் தனது தாயாருக்கு உயில் மூலம் சொத்து கிடைத்ததாக விவரம் கூறியிருக்கிறார். ஆனால் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் அந்த உயில் தாக்கல் செய்யவில்லை. உயில் மூலம் பிரதிவாதியின் தாயாருக்கு தாவா 1வது அயிட்ட சொத்து கிடைத்தது என்பதை பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை. பிரதிவாதியின் தாயாருக்கு தாவா 1வது அயிட்ட சொத்து உரிமை இல்லாத நிலையில், அவர் தனது மகனான பிரதிவாதிக்கு எழுதிவைத்த தான பத்திரம் ஆரம்ப முதலே செல்லாது. எனவே அந்த ஆவணத்தை ரத்து செய்ய வாதி பரிகாரம் கோரவேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை A.S.(MD).No.151/2019, Vimala Damayanthi Vs. J.R.Symonmorris Dated:08.12.2025 என்ற முன் தீர்ப்பில் ஆரம்ப முதலே செல்லாத ஆவணங்களை ரத்து செய்ய தனியாக பரிகாரம் கேட்க அவசியம் இல்லை என்று தீர்வு கண்டுள்ளது.

10. வாதி தரப்பில் வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ள நபர் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு எதிர் பக்கத்தில் உள்ள நபர் ஆவார். அவர் தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி அனுபவம் செய்வதாக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.3 உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர் ஆவார். அவர் தனது சாட்சியத்தின் மூலம் நடப்பா (எ) சின்னகுழந்தை வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை எழுதிவைத்ததையும், அதில் தான் சாட்சி கையொப்பம் செய்த்ததையும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்துக்கள் குறித்து வாதி பெயருக்கு வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதிவைக்கப்பட்டது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதி தரப்பில் அவரது தாயாருக்கு எழுதிவைக்கப்பட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயாருக்கு உரிமை இல்லாத நிலையில், பிரதிவாதிக்கு அவர் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது. பிரதிவாதிக்கு 1வது அயிட்ட சொத்தை பொறுத்து உரிமை ஏதும் இல்லை. பிரதிவாதியான பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், தனது தாயார் பெயரில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சீதா அம்மாளுக்கு சொத்து எவ்வாறு வந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறியிருக்கிறார். எனவே தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

11. வழக்கு உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி பெயரில் உள்ள வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் பத்திரம் 13.03.2023 அன்று பெறப்பட்டுள்ளது. அதன்பிறகு தான் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு பிரதிவாதி பெயரில் ஆவணம் ஏற்பட்ட விவரம் வாதிக்கு தெரியவந்தது. அதன்பிற்கு வாதி தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. காலவரையறை சட்டம் Art. 58ன் அடிப்படையில், வழக்கு தாக்கல் செய்ய உரிமை ஏற்பட்ட 3 ஆண்டுகளுக்குள் விளம்புகை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும். 2023ம் ஆண்டில்தான் தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து பிரச்சனை ஏற்பட்டது. 2023ம் ஆண்டிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கு உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. உயில் ஆவணத்தை சென்னை போன்ற பெரு நகரத்தில் மட்டும்தான் Probate செய்யவேண்டும் மற்ற பகுதிகளில் Probate செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் V.Thirumoorthy Vs. The Sub Register Nambiyur, Erodu District என்ற வழக்கில் தீர்வு கண்டுள்ளது. வாதி தனது தரப்பு சாட்சியத்தின் மூலம் உயில் ஆவணம் மூலம் தனக்கு வழக்கு சொத்துக்கள்

கிடைத்தது என்பதை நிரூபணம் செய்துள்ளார். வாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் அதன் தொடர்ச்சியான உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கக்கூடியதாகும். வாதியின் வழக்கை அனுமதிக்கவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

13. <u>பிரதிவாதி தரப்பு எழுத்துமூலமான வாதுரையின் சுருக்கம்</u>:–

தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டும் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களின் பெயரில் பிரச்சனை இல்லை என்று வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். வாதியான வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வா.சா.ஆ.2 உயில் விவரங்கள் தெரிந்து 20 வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தினை அனுபவம் செய்து வருவதற்கு வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை தவிர வேறு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனது அம்மாவிற்கும் பிரதிவாதியின் அம்மாவிற்கும் பாகப்பிரிவினை ஒன்று ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும், அதனை வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியிருக்கிறேன் என்று கூறி இருக்கிறார். ஆனால் அதுபோன்ற விவரம் வாதி தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. 04.05.2012 தேதியில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்த விவரம் முதலில் எனக்கு தெரியாது தற்போதுதான் தெரியும் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி 12 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்பதை வாதி ஒப்புக்கொண்டுள்ளார். 14.12.2002 தேதியிட்ட உயில்தான் நடப்பா (எ) சின்னகுழந்தை எழுதிய கடைசி உயில் ஆவணம் என்பதையும் வாதி ஒப்புக்கொண்டுள்ளார். தாவா 1வது அயிட்ட சொத்தின் பட்டா பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்பதையும், பட்டா மாற்றம் செய்யும்போது அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்து பின்னர் பட்டா மாற்றம் செய்வார்கள் என்று ஒப்புக்கொண்டுள்ளார். பிரதிவாதியின் தாயாருக்கு பிரதிவாதி ஒரே மகன் என்பதால் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். பிரதிவாதி 1வது அயிட்ட சொத்தை அடமானம் மற்றும் அக்கிரிமெண்ட் போட்ட நபருகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். 1வது அயிட்ட சொத்தை வாதி பயிர் செய்வதற்கான பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

14. வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், என்னுடைய ஆவணமும் அன்றைய தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் அதே தேதியில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதாக விவரம் சொல்லவில்லை என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். வாதி பெயரில் ஏற்பட்ட உயில் ஆவணம் நடப்பா (எ) சின்னகுழந்தை முழு விருப்பத்தின் பேரில் எழுதினார் என்பதை வாதி தரப்பில் நிரூபணம் செய்ய தவறியுள்ளார். அவர்

இறந்து 21 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அவர் இறந்தவுடன் உயில் நடைமுறைக்கு வரவில்லை என்பது தெள்ள தெளிவாகிறது. நடைமுறைக்கு வந்திருந்தால் அதுகுறித்த ஆவணத்தை வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார். எனவே 1வது அயிட்ட சொத்தானது நடப்பா (எ) சின்னகுழந்தை இறந்தவுடன் நடைமுறைக்கு வரவில்லை என்பது தெளிவாகிறது.

15. பிரதிவாதிக்கு அவரது தாயார் சொத்து எழுதிக்கொடுத்து 12 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். 1994ல் உயில் எழுதப்பட்ட நிலையில், அவர் இறந்த 21 வருடம் கழித்து உயிலில் கண்ட சொத்து சம்மந்தமாக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சட்டப்படி ஏற்புடையதல்ல. இளவராக 14 வயதில் இருந்தபோது எழுதப்பட்ட உயிலை 44 வயதில் வழக்கு தொடர்ந்து விளம்புகை பரிகாரம் கோருவது காலவதி தோஷத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது.

16. தாவா 1வது அயிட்ட சொத்தை பிரதிவாதி ஒருவருக்கு அடமான செய்துள்ளார் என்பதையும், அது நிலுவையில் உள்ளது என்பதையும் வாதி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த நபரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. 2013ல் பகுதி சொத்தினை அடமானம் போட்டு அதன் பின்னர் 2023ல் பைசல் செய்துள்ளார். மேற்படி அடமானம் வழக்கிற்காக வில்லங்கம் ஏற்படுத்த போடப்பட்டது என்று வாதி தரப்பில் கூறுவது உண்மையல்ல. ஏனெனில் இந்த வழக்கு 2023ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 2013ம் ஆண்டிலேயே அடமானம் போடப்பட்டுள்ளது.

17. 1வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டும் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ள நிலையில், 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களை வழக்கில் ஏன் காட்டப்பட்டுள்ளது என்பதற்கு விளக்கம் எதுவும் இல்லை. 1வது அயிட்ட சொத்து குறித்து வாதி எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே வாதியின் வழக்கு சட்டப்படி ஏற்புடையதல்ல. 04.05.2012 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று வாதி கூறியிருப்பதால் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதி ஒப்புக்கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறது. 1வது அயிட்ட சொத்தை குறித்து பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்வதற்கு பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை. 1வது அயிட்ட சொத்தை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே வாதி 1வது அயிட்ட சொத்து குறித்து எந்தவிதமான உரிமையும் கொண்டாட தகுதியற்ற நபர் என்பது தெளிவாகிறது. வாதி கோரிய பரிகாரம் சட்டப்படி ஏற்புடையதல்ல.

18. பிரதிவாதி தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள முன் தீர்ப்புகள்.

1. IN THE SUPREME COURT OF INDIA, CIVIL APPEAL NO.562 OF 2003 DATED:13.05.2011, Rangammal Vs. Kuppuswami and another என்ற வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை யார் தீர்ப்பு பெற விரும்புகிறார்களோ அவர்களே அதனை நிரூபணம் செய்யவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கை நிரூபணம் செய்யவேண்டியது வாதியின் கடமை ஆகும். தாவா 1வது அயிட்ட சொத்து சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. உயில் ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து வாதி தாக்கல் செய்யவில்லை. 1வது அயிட்ட சொத்து குறித்து பிரதிவாதி உரிமை கோருவதாக ஊரில் பேசி வந்ததாக வழக்குரையில் விவரம் கூறியுள்ளார். அது குறித்து வாதி தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே வாதியின் வழக்கு ஏற்புடையதல்ல.

19. பிரதிவாதிக்கு அவரது தாயார் எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும். செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா 1வது அயிட்ட சொத்தை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதற்கு ஆதாரமாக பி.வா.சா.ஆ.4 பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த சம்பத் என்பவர் பி.வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்ததை கூறி சாட்சியம் அளித்துள்ளார். தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 1வது அயிட்ட சொத்தை பிரதிவாதி கோவிந்தராஜ் என்பவருக்கு அடமானம் போட்டு பைசல் செய்துள்ளார். அடமான ஆவணம் மற்றும் பைசல் ரசீது பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்றும் கோவிந்தராஜ் பி.வா.சா.3 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி தான பத்திரத்தில் நிறைய சொத்துக்கள் இருப்பதால் அதற்கு அசல் பத்திரம் தேவை என்பதால், அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை.

20. BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT, S.A(MD) NO.562 OF 2014, C.Muthuselvi Vs. R.Vanaja, dated 11.04.2022 என்ற வழக்கில் பட்டா உரிமை மூல ஆவணம் இல்லை என்றாலும் சொத்தை அனுபவம் செய்வதை நிரூபிக்கும் முக்கிய ஆவணம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. பிரதிவாதி பெயரில் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வாதி தரப்பில் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

21. பிரதிவாதியின் தாயாருக்கு நடப்பா (எ) சின்னகுழந்தை 16.11.2002ல் எழுதிவைத்த உயில் சம்மந்தமாக பிரதிவாதிக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் விவரம் சொல்லப்பட்டுள்ளது. அந்த உயில்தான் சின்னகுழந்தையின் கடைசி உயில் ஆகும். அதனை வாதி குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

உயில் எழுதியவர் இறந்தவுடன் உயில் நடமுறைக்கு வந்துவிடும். பட்டா மாற்றம் செய்தால் சட்டப்படி நடைமுறைக்கு வந்ததாக கருதமுடியும். பிரதிவாதிக்கு எழுதிவைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனவே சின்னகுழந்தை எழுதிவைத்த உயில் சட்டப்படி நடைமுறைக்கு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. பிரதிவாதியின் தாயார் இறந்துவிட்டார். பிரதிவாதியின் தாயார் பெயருக்கு எழுதப்பட்ட உயிலை பிரதிவாதியின் தாயார் பிரதிவாதியிடம் அளிக்கவில்லை. அதனால் நீதிமன்றத்தில் உயிலை தாக்கல் செய்ய முடியவில்லை. அதனால் பிரதிவாதியின் சொத்து உரிமை எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது. 2020(3) CTC 191, Balkis Natciar and others Vs. Arulmigu Adheeswarar Thirukoil and others, dated 25.02.2020 என்ற வழக்கில் பிரதிவாதி உரிமை ஆவணங்களை தாக்கல் செய்யாத காரணத்தால் வாதி விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வாதி மற்றும் பிரதிவாதி உறவினர்கள் ஒரே ஊரை சார்ந்தவர்கள் இருவருக்கும் கட்சி சம்மந்தமாக பிரச்சனைகள் உள்ளது. பிரதிவாதிக்கு அவரது தாயார் ஆவணம் எழுதிவைத்த விவரம் வாதிக்கு தெரியும். ஆனால் வழக்கில் விவரம் தெரியாது என்று கூறியிருப்பது ஏற்புடையதல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தை பிரதிவாதி விற்பனை செய்ய முயற்சித்து வருகிறார் என்று வாதி தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கிற்காக பிரதிவாதி 1வது அயிட்ட சொத்தை மட்டும் அடமானம் செய்து வந்தார் என்று வாதி தரப்பில் வாதம் செய்திருப்பது ஏற்புடையதல்ல. 2013ம் ஆண்டில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அடமானம் போட்டுள்ளார். 2023ல் பைசல் செய்துவிட்டார். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட குறிப்பிட்ட சொத்தை அடமானம் போடவேண்டும் என்று அவருக்கு யாரும் கூறமுடியாது. பிரதிவாதிக்கு சொத்து விற்கும் எண்ணம் இதுவரை இல்லை. செட்டில்மெண்ட் பத்திரத்தில் நிறைய சொத்துக்கள் உள்ள நிலையில், பிரதிவாதி எந்த சொத்தை வேண்டிமானலும் அடமானம் போடலாம். பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

22. வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரையிலிருந்து இவ்வழக்கை தீர்வு காண 10.06.2024ம் தேதி பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டது.

1.Whether the Will Dated 12.10.1994 is a genuine document?

2. Whether partition Deed with respect to the suit properties was executed between the mother of Plaintiff and Defendant on 19.09.1988?

3. Whether Chinna Kuzlandai Pillai had executed a will in fover of the Defendant’s mother Seetha on 16.11.2002?

4. Whether Seetha had exected a gift settlement Deed vide Doc.No.4237/2012 in favour of her son being the Defendant and is was acted upon?

5. Whether Plaintiff is the absolute title holder of the 1st item of suit property?

6.Whether the Plaintiff is entitled for the relief of Declaration and Consequential Permanent Injunction in respect of 1st itme of suit property as prayed for?

7. To what other relief the Plaintiff is entitled for?

23. வாதி தரப்பில், வாதி வா.சா.1 திரு.லட்சுமண காந்தன் (எ) சோமசுந்திரம், வா.சா.2 திரு.பிச்சைக்காரன், வா.சா.3 திருராஜேந்திரன் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். 10.02.2020 தேதியிட்ட பட்டா நெம்பர் 339—க்கான கணினி சிட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.1, 12.10.1994 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் அசல் வா.சா.ஆ.2, 14.12.2002 தேதியிட்ட சின்னகுழந்தை என்கிற நடப்பா இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.3 04.05.2012 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4, 18.04.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.5, 15.05.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.6, பதிவு துறை வழிகாட்டு மதிப்பீட்டு ஆவணம் வா.சா.ஆ.7, வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள இன்னார் என்ற இடத்தில் உள்ள வா.சா.2ன் கையெழுத்து வா.சா.ஆ.8, வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து வா.சா.ஆ.9, வில்லங்கச்சான்று வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

24. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி பி.வா.சா.1 திரு.பிச்சை, பி.வா.சா.2 திரு.சம்பத், பி.வா.சா.3 திரு.கோவிந்தராஜ் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். நடப்பா (எ) சின்ன குழந்தை இறப்பு சான்று அசல் பி.வா.சா.ஆ.1, 04.05.2012 தேதியிட்ட தான பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2, சின்ன குழந்தை பெயரில் உள்ள பட்டா எண்.339க்கான கணினி பட்டா பி.வா.சா.ஆ3, பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.3710க்கான கணினி பட்டா பி.வா.சா.ஆ4, 14.08.2013 தேதியிட்ட அடமானக் கடன் பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.5, 06.04.2023 தேதியிட்ட பைசல் ரசீது அசல் பி.வா.சா.ஆ.6, பி.வா.சா.ஆ.2ல் உள்ள பி.வா.சா.2ன் சாட்சி கையெழுத்து பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.2ன் ஆதார் அட்டை நகல்(அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது) பி.வா.சா.ஆ.8, பி.வா.சா.ஆ.6ல் உள்ள பி.வா.சா.3ன் கையெழுத்து பி.வா.சா.ஆ.9, ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது) பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

25. <u>எழுவினா எண்.1 ற்க்கான தீர்வு:—</u>

1.Whether the Will Dated 12.10.1994 is a genuine document?

வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் 12.10.1994 தேதியிட்ட உயில் ஆவணம்

மூலம் தனக்கு உரிமையானது என்றும் அதில் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் அதன் தொடர்ச்சியான உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், தாவா 1வது அயிட்ட சொத்து மற்றும் இதர சொத்துக்களை குறித்து வாதியின் தாயார் வேதவள்ளி மற்றும் பிரதிவாதியின் தாயார் சீதா ஆகியோருக்கு இடையே 19.09.1988ல் குடும்ப பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும், அதன்படி சீதா அம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் அனுபவித்து வந்ததாகவும், பிரதிவாதியின் தாயார் சீதா அம்மாளுக்கு 16.11.2002ல் சின்னகுழந்தை பிள்ளை என்பவர் உயில் ஆவணம் எழுதிக்கொடுத்தாகவும், சின்னகுழந்தை இறந்த பிறகு மேற்படி உயில் ஆவணம் அடிப்படையில், சீதா அம்மாள் கைபற்றி அனுபவம் செய்து வந்து பிரதிவாதி பெயருக்கு ஆவண எண்.4237/2012 என்ற தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை எழுதிவைத்ததாகவும், தான செட்டில்மெண்ட் பத்திரப்படி பிரதிவாதி தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாகவும், பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

26. வாதியின் உரிமை மூலத்தை பிரதிவாதி மறுத்துள்ளதால், அதனை வாதி நிரூபணம் செய்யவேண்டியது அவசியமாகும். வா.சா.ஆ.2ஆக வாதி பெயருக்கு நடப்பா (எ) சின்னகுழந்தை பிள்ளை எழுதிய பதிவு செய்யப்பட்ட 12.10.1994 தேதியிட்ட உயில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தை நிரூபணம் செய்யவேண்டி அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ள சாட்சி ராஜேந்திரன் என்பவர் வாதி தரப்பில் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், வழக்கு சொத்துக்களை பொறுத்து வாதியை இளவராக காட்டி அவருக்கு பாதுகாவலராக அவரது தகப்பனார் ஆறுமுகம் என்பவரை குறிப்பிட்டு 12.10.1994ல் நடப்பா (எ) சின்னகுழந்தை பிள்ளை உயில் ஆவணம் எழுதிவைத்தாகவும், அந்த உயிலில் தான் கையொப்பம் செய்ததாகவும், தன்னுடன் தனது மனைவி சாந்தா என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், உயில் ஆவணத்தை மார்கபந்து என்பவர் எழுதியதாகவும், நடப்பா (எ) சின்னகுழந்தை உயிலில் கைரேகை வைத்ததை தானும், தனது மனைவியும், உயில் எழுதிய மார்கபந்துவும் பார்த்ததாக கூறி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

27. வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.3ன் சாட்சியத்தின்படி வா.சா.ஆ.2 உயில் ஆவணம் வாதி பெயருக்கு நடப்பா (எ) சின்னகுழந்தை பிள்ளை வழக்கு சொத்துக்களை பொறுத்து எழுதிவைத்துள்ளார் என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதி தரப்பில் வா.சா.ஆ.2 உயில் ஆவணம்

உண்மையானது என்று உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த வா.சா.3ன் சாட்சியம் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த எழுவினா–1ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**28. எழுவினா எண்.2 ற்க்கான தீர்வு:–**

2. Whether partition Deed with respect to the suit properties was executed between the mother of Plaintiff and Defendant on 19.09.1988?

வாதி தனது வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் வா.சா.ஆ.2 உயில் ஆவணம் மூலம் தனது பெயருக்கு எழுதிவைக்கப்பட்டதாக விவரம் கூறியுள்ளார். பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில், வழக்கு சொத்துக்களும் இன்னும் பிற சொத்துக்களும் நடப்பா (எ) சின்னகுழந்தைக்கு உரிமையாக இருந்தது என்றும், வாதியின் தாயார் வேதவள்ளி மற்றும் பிரதிவாதியின் தாயாரான சீத்தா அம்மாள் ஆகியோருக்கு இடையே 19.09.1988ல் பாகப்பிரிவினை ஏற்பட்டு அதில் அ ஷெட்யூல் சொத்தாக சீத்தா அம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது என்று விவரம் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பிரதிவாதி மேற்படி பாக பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்பதை நிரூபணம் செய்வதற்கு பிரதிவாதி தரப்பில் 19.09.1988 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு சொத்துக்கள் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்ற சங்கதியை பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை என்று இந்த எழுவினா–2ற்க்கு இந்த நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**29. எழுவினா எண்.3 ற்க்கான தீர்வு:–**

3. Whether Chinna Kuzlandai Pillai had executed a will in fover of the Defendant’s mother Seetha on 16.11.2002?

வழக்கு சொத்துக்கள் 12.10.1994 தேதியிட்ட உயில் மூலம் வாதிக்கு உரிமையானது என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் என்பவர் பிரதிவாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருப்பதாக தெரியவந்ததின் பேரில் பிரதிவாதி 1வது அயிட்ட சொத்து தனக்கு சொந்தம் என்று கூறி வந்த நிலையில், தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து பிரதிவாதி உரிமை கோரக் கூடாது என்று வாதி தரப்பில் வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு கடந்த 18.04.2023ஆம் தேதி அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு 15.05.2023ஆம் தேதி பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அந்த பதில் அறிவிப்பில் சின்னகுழந்தைபிள்ளை, பிரதிவாதியின் தாயாருக்கு 14.12.2002ஆம் தேதியில் உயில் சாசனத்தை எழுதி வைத்துவிட்டு அவர் காலமான பிறகு மேற்படி சொத்தினை பிரதிவாதியின் தாயாருக்கு கிடைக்கப்பெற்று அவர் 04.05.2012ல் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்ததாகவும், அதன்படி பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்று பிரதிவாதி பெயரில்

பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருவதாக விவரம் கூறி பதில் அனுப்பப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் நடப்பா (எ) சின்னகுழந்தை என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், சின்னகுழந்தை பெயரில் பட்டா எண்.339 ஏற்பட்டுள்ளது என்றும், அதன் பின்னர் 19.09.1988ல் வாதியின் தாயார் வேதவல்லி மற்றும் இப்பிரதிவாதியின் தாயாரான சீத்தா என்பவருக்குள் குடும்ப பாகப்பிரிவினை பத்திரம் எழுதி உள்ளார்கள் என்றும், அதன் அடிப்படையில் பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு 'ஆ' ஷெட்யூல் சொத்தானது ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த பாகப்பிரிவினை பத்திரப்படி வேதவல்லி மற்றும் சீத்தா ஆகியோர்கள் சொத்தினை கைப்பற்றி அனுபவித்து வந்தார்கள். பிரதிவாதியின் தாயார் சீத்தா பெயருக்கு மேற்படி சின்னகுழந்தை பிள்ளை 16.11.2002ல் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். அவர் 14.12.2002ல் இறந்து விட்டார். அவர் எழுதி வைத்துள்ளது உயில் நடைமுறைக்கு வந்து சீத்தா அம்மாள் சொத்தை கைப்பற்றி அனுபவித்து வந்து பிரதிவாதியான தன் மகனுக்கு 04.05.2012ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார். அதன் அடிப்படையில் பிரதிவாதி சொத்துக்களை அடைந்து பிரதிவாதி பெயருக்கு பட்டா எண்.3710 ஏற்பட்டுள்ளது என்று எதிர்வழக்குரையில் விவரம் கூறப்பட்டுள்ளது.

30. பிரதிவாதி தரப்பில் வழக்கு சொத்துக்கள் குறித்து வாதியின் தாயார் வேதவல்லி மற்றும் பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு இடையே பாகப்பிரிவினை 19.09.1988ல் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்வதற்கான பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் பெயருக்கு நடப்பா (எ) சின்னகுழந்தை தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைத்திருப்பதாக எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பில் அந்த உயில் ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து நடப்பா (எ) சின்னகுழந்தை பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு 16.11.2002ல் உயில் எழுதிவைத்தார் என்பதை நிரூபணம் செய்ய வேண்டிய கடமை பிரதிவாதியை சாரும். ஆனால், பிரதிவாதி தரப்பில் மேற்படி உயில் ஆவணம் தாக்கல் செய்யாததால் எதிர் வழக்குரையில் பிரதிவாதி கூறி இருக்கும் சங்கதியான பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு சின்னகுழந்தை பிள்ளை 16.11.2002ல் உயில் எழுதி வைத்தார் என்ற சங்கதி பிரதிவாதியால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த எழுவினா–3ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**31. எழுவினா எண்.4ற்க்கான தீர்வு:–**

4. Whether Seetha had exected a gift settlement Deed vide Doc.No.4237/2012 in favour of her son being the Defendant and is was acted upon?

பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் பிரதிவாதி பெயருக்கு 04.05.2012ம்

தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் தாவா 1வது அயிட்ட சொத்து மற்றும் இதர சொத்துக்கள் பிரதிவாதிக்கு உரிமையானது என்று எதிர்வழக்குரையில் விவரம் கூறப்பட்டுள்ளது. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வாதித் தரப்பில் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் அதே தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, சீத்தா என்பவர் தனது மகனான பிச்சை என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஆவணமாக உள்ளது. அந்த ஆவணத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, எனக்கும், என்னுடைய சகோதரி வேதவல்லி அவர்களுக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி சொத்து கிடைத்தது என்றும் மற்றும் சர்வே எண்.283/4 மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 1.16 சென்ட் என்று குறிப்பிட்டு விவரம் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சர்வே எண்.283/4 இவ்வழக்கில் தாவா 1வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் தாயாருக்கு பாகப்பிரிவினையில் பாகமாக ஒதுக்கப்பட்டதாக அவர் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் விவரம் இல்லை. தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் தாயாருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது என்பதற்கான பாகப்பிரிவினை ஆவணம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் கூறியிருப்பது போல் தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் தாயாருக்கு உயில் ஆவணம் மூலம் கிடைத்து இருந்தால் அந்த விவரத்தை பிரதிவாதி தனது மகனுக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரமான பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஏன் குறிப்பிடவில்லை என்பதற்கு விளக்கம் எதுவும் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மொத்தம் ஆறு சர்வே எண்கள் குறிப்பிட்டு தான செட்டில்மெண்ட் எழுதப்பட்டுள்ளது. அதில் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள 1வது அயிட்ட சொத்தான சர்வே எண்.283/4 சொத்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற சொத்துக்கள் குறித்து வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே பிரச்சனை ஏதுமில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் மற்ற சொத்துகளுக்கும் தாவா 1வது அயிட்ட சொத்திற்கும் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. தான செட்டில்மெண்ட் பத்திரப்படி பிரதிவாதிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்திருப்பதால் தான செட்டில்மெண்ட் பத்திரம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவா 1வது அயிட்ட சொத்து மற்றும் இதர சொத்துகளுக்கு பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா எண்.3710 பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதியின் தாயார் சீத்தாம்மாள் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 04.05.2012 தேதியிட்ட ஆவண எண்.4237/2012 செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்துள்ளது என்றும் தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து

பிரதிவாதிக்கு உரிமைமூலம் ஏற்பட்டது என்று பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை என்றும் இந்த எழுவினா–4ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**32. எழுவினா எண்கள்.5 மற்றும் 6ற்க்கான தீர்வு:–**

5. Whether Plaintiff is the absolute title holder of the 1st item of suit property?

6.Whether the Plaintiff is entitled for the relief of Declaration and Consequential Permanent Injunction in respect of 1st item of suit property as prayed for?

வாதி தனது வழக்குரையில், தாவா சொத்துக்கள் ஆதியில் நடப்பா (எ) சின்ன குழந்தை பிள்ளை என்பவருக்கு உரிமையாக இருந்தது என்றும், சின்னகுழந்தை பிள்ளை பெயரில் உள்ள பட்டா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும். மேற்படி சின்னகுழந்தை பிள்ளை வாதியை இளவராக காட்டி அவரது தந்தை ஆறுமுகத்தை அவரது பாதுகாவலராக குறிப்பிட்டு 12.10.1994 வழக்கு சொத்துக்களைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி சின்னகுழந்தைபிள்ளை 14.02.2002ல் இறந்து விட்டதாகவும், அவர் இறந்த பிறகு உயில் நடைமுறைக்கு வந்து விட்டது என்றும், வழக்கு சொத்துகளுக்கு வாதி உரிமையாளர் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தை தவிர்த்து மற்ற இரண்டு சொத்துக்களுக்கு வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் உரிமை இல்லை என்றும், பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தாவா 1–வது அயிட்ட சொத்தை பொறுத்து எழுதி வைக்க உரிமை இல்லை என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து தெரிய வந்த பிறகு வாதி தனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் குறிப்பிட்டுள்ளார். தாவா 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களுக்கு பிரதிவாதி பிரச்சனை செய்யாததால் அது குறித்து பரிகாரம் கேட்கவில்லை என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டும் விளம்புகை பரிகாரம் மற்றும் அதன் தொடர்ச்சியான உறுத்துகட்டளை பரிகாரம் கோரி இருப்பதாக இந்த வழக்குரையை தாக்கல் செய்திருக்கிறார். பிரதிவாதி தரப்பில், வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் தாவா 1வது அயிட்ட சொத்து சீத்தா அம்மாளுக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டது. அதன் பிறகு பிரதிவாதியின் தாயார் 04.05.2012ல் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டதாகவும், அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு தாவா சொத்து உரிமையானது என்றும், 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

33. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் வழக்கு சொத்துக்கள் வாதி பெயருக்கு எழுதி வைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய

வருகிறது. மேற்படி உயில் ஆவணத்தை நடப்பா (எ) சின்ன குழந்தை பிள்ளை, வாதி பெயருக்கு எழுதி வைத்துள்ளார். அந்த உயில் ஆவணத்தை இந்திய சாட்சிய சட்டப்படி நிரூபணம் செய்வதற்கு வாதி தரப்பில் உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர் வா.சா.3ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றத்தில் வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டது குறித்தும், அதில் சின்னகுழந்தை பிள்ளை கைரேகை வைத்ததையும் அதில் தான் சாட்சி கையொப்பம் செய்ததையும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி வா.சா.ஆ.2 உயில் ஆவணம் வாதி பெயருக்கு சின்னகுழந்தை பிள்ளையால் எழுதி வைக்கப்பட்டது என்பது வாதித் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. உயில் ஆவணம் எழுதி வைத்த சின்னகுழந்தைபிள்ளை இறந்ததற்கான இறப்புச் சான்று வா.சா.ஆ.3ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சின்னகுழந்தைபிள்ளை இறந்த பிறகு உயில் நடைமுறைக்கு வந்துவிட்டதாகவும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் வாதிக்கு உரிமையானது என்றும், வாதி தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதம் ஏற்கும் படி உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால், உயில் ஆவணத்தை வாதி தரப்பில் அதில் சாட்சி கையொப்பம் செய்த சாட்சியான வா.சா.3 மூலம் நிரூபணம் செய்துள்ளார்கள். எனவே, உயில் ஆவணம் அதை எழுதி வைத்த சின்னகுழந்தைபிள்ளை இறந்த பிறகு நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் வாதிக்கு உரிமையானது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

34. பிரதிவாதி தரப்பில், தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து சின்னகுழந்தை பிள்ளை பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு 16.11.2002ல் உயில் ஆவணம் எழுதிவைத்ததாகவும், சின்னகுழந்தைபிள்ளை இறந்த பிறகு சீத்தா அம்மாளுக்கு சொத்து கிடைத்து. அதை அனுபவித்து வந்து அவர் தனது மகனான பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிவைத்ததாகவும், தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி பிரதிவாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்து கிடைக்கப்பெற்று அதை அவர் அனுபவித்து வந்து 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தாவா 1வது அயிட்டத்தை பொறுத்து பிரதிவாதி உரிமை கோருகிறார். ஆனால், எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருப்பது போல் பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் பெயருக்கு 16.11.2002ல் சின்னகுழந்தைபிள்ளை எழுதி வைத்துள்ள உயில் ஆவணம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு எந்த உரிமையும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. உரிமை இல்லாத சீத்தா அம்மாள் பி.வா.சா.ஆ.2 தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பிரதிவாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது ஆரம்பம் முதலே செல்லாது என்று வாதி தரப்பில் வாதம்

செய்யப்பட்டது. மேற்படி, வாதி தரப்பு வாதம் ஏற்கும் படி உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு உரிமையாக இருந்தது என்பதை பிரதிவாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. உரிமை இல்லாத சொத்து குறித்து பிரதிவாதியின் தாயார் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க முடியாது. சர்வே எண்.283/4 என்ற தாவா 1வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாளுக்கு உரிமையானது என்பதை பிரதிவாதி தகுந்த சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. எனவே, தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயார் சீத்தா அம்மாள் பிரதிவாதிக்கு தான செட்டில்எமெண்ட் பத்திரம் எழுதி வைக்க உரிமை இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

35. வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.2 உயில் ஆவணம் மூலம் வாதிக்கு கிடைத்தது என்பதை தகுந்த சான்றாவணங்கள் மற்றும் சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தாவா 1வது அயிட்ட சொத்து வாதிக்கு உரிமையானது என்றும், விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது என்றும் விளம்புகை பரிகாரத்தை தொடர்ந்து தாவா சொத்தை வாதி அனுபவம் செய்வதை பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்க கூடியது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

36. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எழுத்து மூலமான வாதுரையில், தாவா சொத்தை வாதி அனுபவம் செய்வதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று வாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தின் பட்டா பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்று வாதி ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், எனவே தாவா சொத்து குறித்து வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து உயில் ஆவணத்தை தவிர எந்த ஒரு ஆவணமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும், வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்கும் படி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால் வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் உயில் ஆவணம் மூலம் கிடைத்தது என்பதை நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் உரிமை இல்லை என்பதும் தெரிய வருகிறது. தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைக்க எந்த உரிமையும் இல்லாத நிலையில், தாவா 1வது சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க பிரதிவாதியின் தாயாருக்கு உரிமை இல்லை. எனவே, மேற்படி பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்கும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. உரிமை இல்லாத சொத்திற்கு பிரதிவாதி பெயரில்

ஏற்பட்டுள்ள பட்டா எண்.3710 பிரதிவாதிக்கு எந்த உரிமையும் அளிக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. (Possession follows title) உரிமை மூலத்தை தொடர்ந்து சுவாதீனம் செல்லும் என்ற சட்ட நிலைமை படி வாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்து உரிமையானது என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் அடிப்படையில் உரிமை மூல ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தின் சுவாதீனம் வாதியின் வசம் உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு கண்டு வாதிக்கு விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியான உறுத்துக்கட்டளை பரிகாரமும் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

37. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று எந்த ஒரு வாதுரையும் முன்வைக்கவில்லை. மேலும் தாவா 1வது அயிட்ட சொத்து குறித்து பிரதிவாதிக்கு உரிமை இல்லாத நிலையில், அவர் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து ஏற்படுத்தியுள்ள அடமான பத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்தம் ஆகியவை வாதியின் வழக்கை பாதிக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது ஏனென்றால் உரிமை மூலத்தை பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை. உரிமை இல்லாத பிரதிவாதி தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து ஏற்படுத்தியுள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி ஆரம்ப முதலே செல்லாத ஆவணங்கள் ஆகும். எனவே, பிரதிவாதி தரப்பு வாதம் ஏற்கும்படி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

38. பிரதிவாதி தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள முன் தீர்ப்புகள் பிரதிவாதியின் எதிர்வழக்குரைக்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஏனென்றால் தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு உரிமை இருப்பதாக பிரதிவாதி தரப்பில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதியின் தாயாருக்கு தாவா 1வது அயிட்ட சொத்தை உரிமை மாற்றம் செய்ய உரிமை இல்லாத நிலையில், எழுதப்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில், பிரதிவாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்தில் உரிமை ஏற்படாது என்பதால் பிரதிவாதி தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள முன் தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருந்தும் விதமாக இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

39. வாதி தரப்பில் வாதம் செய்யும்போது தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதியின் தாயார் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் 2023ல் பெற்ற பிறகு தான் அந்த ஆவணம் குறித்து தெரியவந்தது என்றும், அதன் அடிப்படையில் வழக்கறிஞர் அறிவிப்பு உடனடியாக அனுப்பப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. காலவரையறை சட்டம் ஆர்டிக்கல் 58ன் கீழ் விளம்புகை பரிகாரம் கோருவதற்கு உரிமை எப்போது ஏற்படுகிறதோ அந்த தேதியிலிருந்து 3 வருட

காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கில் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்த விவரம் 2023ம் ஆண்டுதான் தெரியவந்தது. எனவே வழக்கு உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதம் ஏற்க்கும்படி உள்ளது.

40. எனவே வாதிக்கு தாவா 1வது அயிட்ட சொத்து உரிமையானது என்றும், வாதி 1வது அயிட்ட சொத்தை அனுபவம் செய்வதை பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்ற உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று இந்த எழுவினாக்கள் 5 மற்றும் 6க்கு தீர்வு காணப்படுகிறது.

**41. எழுவினா எண்.7 ற்க்கான தீர்வு:-**

வாதிக்கு இவ்வழக்கில் வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்று எழுவினா-7ற்க்கு தீர்வு காணப்படுகிறது.

இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியாக,** தாவா 1வது அயிட்ட சொத்து வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்தும், தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி அனுபவம் செய்வதை பிரதிவாதியோ அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.24 17:41:25 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.லட்சுமண காந்தன் (எ) சோமசுந்திரம்,(வாதி) |
| வா.சா.2 | திரு.பிச்சைக்காரன், |
| வா.சா.3 | திருராஜேந்திரன் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.02.2020 | தேதியிட்ட பட்டா நெம்பர் 339-க்கான கணினி சிட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 12.10.1994 | தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.3 | 14.12.2002 | தேதியிட்ட சின்னகுழந்தை என்கிற நடப்பா இறப்பு சான்று அசல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 04.05.2012 | தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.5 | 18.04.2023 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல். |
| வா.சா.ஆ.6 | 15.05.2023 | தேதியிட்ட பதில் அறிவிப்பு. |
| வா.சா.ஆ.7 | - | பதிவு துறை வழிகாட்டு மதிப்பீட்டு ஆவணம். |
| வா.சா.ஆ.8 | - | வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள இன்னார் என்ற இடத்தில் உள்ள வா.சா.2ன் கையெழுத்து. |
| வா.சா.ஆ.9 | - | வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து. |
| வா.சா.ஆ.10 | - | வில்லங்கசான்று. |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | திரு.பிச்சை,(பிரதிவாதி) |
| பி.வா.சா.2 | திரு.சம்பத், |
| பி.வா.சா.3 | திரு.கோவிந்தராஜ் |

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | – | நடப்பா (எ) சின்ன குழந்தை இறப்பு சான்று அசல் |
| பி.வா.சா.ஆ.2 | – | 04.05.2012 தேதியிட்ட தான பத்திரம் சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.3 | – | சின்ன குழந்தை பெயரில் உள்ள பட்டா எண்.339க்கான கணினி பட்டா. |
| பி.வா.சா.ஆ.4 | – | பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.3710க்கான கணினி பட்டா. |
| பி.வா.சா.ஆ.5 | 14.08.2013 | தேதியிட்ட அடமானக் கடன் பத்திரம் அசல். |
| பி.வா.சா.ஆ.6 | 06.04.2023 | தேதியிட்ட பைசல் ரசீது அசல். |
| பி.வா.சா.ஆ.7 | – | பி.வா.சா.ஆ.2ல் உள்ள பி.வா.சா.2ன் சாட்சி கையெழுத்து. |
| பி.வா.சா.ஆ.8 | – | பி.வா.சா.2ன் ஆதார் அட்டை நகல்(அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது). |
| பி.வா.சா.ஆ.9 | – | பி.வா.சா.ஆ.6ல் உள்ள பி.வா.சா.3ன் கையெழுத்து |
| பி.வா.சா.ஆ.10 | – | ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது). |

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.03.24 17:41:40 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.